1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சனை எப்போது வரும் என்றால், இப் போது முழுமையாகப் படித்து பட்டம் பெற்றிருக்கக் கூடியவர் களுக்கு நாம் வேலை வாய்ப்புக் கொடுத்து இன்னும் தேவைஎன்று இருக்கும்போதுதான் அது வரும். அப்போது அதுபற்றி நாம் சிந்திக்கலாம்.

We have already excess number of doctors who are prepared to do full time work.

முழுமையாகப்பணியாற்றத்தயாராக இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திய பிறகு இதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. மி. வின்சென்ட்: துணைத் தலைவரவர்களே, பயிற்சிப் பெறாமல் போலி பட்டத்தை வைத்துக்கொண்டு, மருத்துவம் செய்யத் தெரியாமல் நோயாளியை கொலை செய்யும் மருத்து வர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மீது கொலை குற்றம் சாட்டி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிறோம்.

வலிவலம் கனகா மருத்துவ மனையை அரசே ஏற்றுக் கொள்ளும் திட்டம்.

11—(*வினா எண் 11709) திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலிவலம் கனகா மருத்துவமனையை அரசே ஏற்கக் கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 940, நலம், நாள் 8-6-83-ல் இம்மருத்துவமனை அரசினால் ஏற்றுக்கொள்ள பெற ஆணை யிடப்பெற்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாக அதை எடுத்து செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்த ஆணையை நாம் போட்டிருக்கிறோம். 8-6-83—ல் உடனடியாக சில நிபந்தனைகளை கொடுத்து இருக்கிறோம், இவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று.

(முற்பகல் 9-10)

A sum of Rs. 1,51,600 being the compensation amount for the surplus land

அந்தப் பணத்தை கொடுக்க வேண்டும் என்று, 2, 3 நிபந்தனைகளைப் போட்டு இருக்கிறோம். அதையும் கவனித்து செய்கிறோம் என்று ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே வெகு விரைவில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வலிவலம் கனகா மருத்துவமனையை அரசு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் அதற்கு பப்ளிக் பண்ட், பொதுமக்கள் நிதி கொடுக்க வேண்டுமென்றோ, அல்லது நிலம் கொடுக்க வேண்டும் என்றோ அரசாங்கம் சில கட்டளைகளை விதித்து இருப்பதாக அறிகிறேன். பொதுவாக மருத்துவமனை சில இடங்களில் வேண்டும் என்று கேட்கிறபோது, டொனேஷன் கொடுக்க வேண்டும் என்றோ, நிலம் கொடுக்க வேண்டும் என்றோ அரசாங்கம் கேட்கிறபோது அப்படிப்பட்ட நிலம் கொடுக்க முடியாத இடத்தில், பப்ளிக் பண்ட் ரெயிஸ் பண்ண முடியாத இடத்தில், அரசாங்கமே இனாமாக பணம் கொடுத்து, நிலம் ஆர்ஜிதம் செய்து, மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியை மனதிலே வைத்துக்கொண்டு கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். இங்கே அதைப் பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்காது. ஏன் என்றால், மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒரு சமாதானத்தைச் சொல்கிறேன். அந்தப் பிரச்சினையும் கவனிக்கப்படும்.

பலநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் சிறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம்.

12—(*வினா எண். 17081) திரு.எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—